# பண்டைய தமிழர்கள் பார்வையில் முருகன்

( God Murukan as viewed by the ancient Tamils - by P. Thiagarajan )

மூலக் கட்டுரை ஆங்கிலத்தில் : பீ. தியாகராஜன்
தமிழ் மொழி பெயர்ப்பு : சாந்திப்பிரியா

பண்டைய கால தமிழ் குடி மக்களின் சமூக, கலாச்சார, மத வாழ்க்கை முறைகள் அனைத்தும் முருக வழிபாட்டு முறைகளுக்கு ஏற்பவே அமைந்து இருந்தன. தமிழ்நாட்டின் அடிகானல்லூர் என்ற இடத்தில் இருந்த மிக முக்கியத்துவம் வாய்ந்ததும், மிகப் பழமையுமான மயானங்களில் இருந்த கல்லறைகளில், வேல் மற்றும் சேவல் சின்னங்கள் கிடைத்துள்ளன. பண்டைய காலத் தமிழர்களைப் பற்றிய சரித்திர ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளவர்களில் மிக முக்கியமானவரும், பெரும் வல்லுரனுமான பேராசிரியர் பீ. டி. ஸ்ரீனிவாசன் என்பவரின் கூற்றின்படி, அடிகானல்லூரில் இருந்த அந்த கல்லறைகள் 7000 ஆண்டுகளுக்கு முட்பட்டவைகள். ஆரியர்கள் வட நாட்டின் வழியாக இந்தியாவிற்கு வந்த பின் அவர்கள் பின்பற்றிய வழக்கத்தைப் போன்றே இறந்து போன பிணங்களை எரிக்கத் துவங்கினர். அதற்கு முன்னர் அந்த இடத்தில் பிணங்கள் எரிக்கப்பட்டன என்பதற்கான எந்த விதமான ஆதாரங்களும் கிடைக்கவில்லை. சரித்திர காலத்திற்கு முன்னரே வேல் வழிபாடும், முருக வழிபாடும் தமிழர்களிடம் இருந்தது. அதில் அவர்கள் தீவிர அர்வமும் கொண்டு இருந்தனர். தொல்காப்பியம், பாட்டுப்பட்டு மற்றும் ஏட்டுத் தொகை முதலிய நூல்களில் கூறப்பட்டுள்ள செய்திகளில் இருந்து அந்த காலத்தில் முருக வழிபாட்டு முறையைச் சார்ந்தே பண்டை தமிழ் குடி மக்களுடைய சமூக, கலாச்சார, மத வாழ்க்கை முறைகள் அமைந்து இருந்தன எனத் தெரிய வருகின்றது.

## போர் முனையில் வெற்றி கொள்ள முடியாத கடவுள்

பண்டைய தமிழர்களின் முருகன் வழிபாட்டு முறைகளை தொல்காப்பியமே முதலில் நமக்கு எடுத்துக் காட்டியது. முருகனை சீயன் என்று அதில் குறிப்பிடப்பட்டு உள்ளது. சங்க இலக்கியங்களில் தங்க முருகனின் பெயர்களை குடர்புன்சி, வேல்பொர்சி, பிம்புன்சி ( ***cutarpuncey, vel porccey*** **and** ***piympuncey***) என குறிப்பிட்டுள்ளன. முருகனின் உடல் சிவப்பு ஒளி போல ஜொலித்தபடிக் காட்சி தர, அவருடைய உடைகள், ஆபரணங்கள், மாலைகள் மற்றும் அவர் கைகளில் வைத்திருந்த வேலும் கூட அனைத்துமே சிவப்பு வண்ணங்களில் அமைந்து இருந்தன என்று பண்டைய தமிழ் குடி மக்கள் நம்பினர். திருமுருகாற்றுப்படையில் கூட முருகன் சிவப்புத் துணிகளை அணிந்திருந்தவர் எனவும், அவர் சிவப்பானவர் எனவும் கூறப்பட்டு உள்ளது. அரக்கர்களையும், அசுரர்களையும் அழித்த முருகப் பெருமான் கோபம் கொந்தளித்து, கண்கள் சிவப்பேற, ஆக்கிரோஷத்துடன் மனித குலத்தின் மேம்பாடுகளுக்கும் நன்மைக்காகவும் அவர்களை அழித்தார் என பண்டை தமிழ் குடி மக்கள் நம்பினர். மேலும் முருகனை அருள் திருக்கடவுள்

(- **aruntiRalkaTavuL** –) அதாவது அபாரமான சக்தி கொண்டவர், பராக்கிரமான செயல்களை செய்து முடிப்பவர் எனவும், அப்படிப் பட்ட அபார சக்தியும், பராக்கிரமத்தையும் கொண்ட அவரை யுத்தத்தில் எவராலும் வெல்ல முடியாது என்றும் நம்பினர்.

தமிழ் குடி மக்கள் போர்க் கடவுளை குறவை (**Korravai**) என்ற பெயரில் வணங்கினர். தமிழில் குறுவை என்றால் போரில் வெற்றி என்ற அர்த்தம் உண்டு. தொல்காப்பியத்தில் குறவை வழிபாட்டைக் பற்றிக் குறிப்பிடுகையில் குறவை நிலை, அல்லது குறவை என்ற போர் கடவுளின் வாயில் இருந்து காற்று போல வெளி வந்தவர் முருகப் பெருமான் என்று அவரைக் குறித்துக் கூறப்பட்டு உள்ளது. பெரும்பாணர்படை (**Perumpanarruppatai**) என்ற நூலில் முருகப் பெருமான் குறவையின் புதல்வன் என்ற குறிப்புக் காணப் படுகின்றது. கமீல் ஸெல்பில் என்பவர் எழதி உள்ளபடி குறவை என்ற போர் கடவுளுடைய பிள்ளையே முருகன் என எண்ணத் தோன்றுகின்றது. அவருக்குத் தந்தை கிடையாது. சமிஸ்கிருத நூல்களின்படி அவர் எந்த தாயாருக்கும் பிறக்கவில்லை. அகநானூறு நூலின்படி தனக்கு அடிபணிந்து நடக்காதவர்களை அழித்து விடும் பராக்கிரமசாலியான போர் கடவுள என்றும் அவர் பெரும் திறமை மிக்கவர் எனவும் தெரிய வருகின்றது. 'இளவான்திகைதுன்சிய நன்மாறன் '(**Illavantikaitunciya Nanmaram**) என்ற சோழ மன்னனைப் பற்றி கூறுகையில் அவரும் முருகனைப் போலவே தான் நினைத்ததை வெற்றிகரமாக நடத்திக் கொள்பவர் என்று கூறுவார்கள்.



வேல் பாறை என்ற பரம்பு மலைப் பகுதியை சேர்ந்த சங்க கால முனிவரான கபிலர் என்பவர் அவரைப் பற்றிக் குறிப்பிடுகையில், தான் நினைத்ததை வெற்றிகரமாகவும் திட்டமிட்டும் நடத்திக் கொள்பவர் எனவும், பயந்து ஒடும் எதிரிகளை விடாது துரத்திச் செல்பவர் என்றும் எழுதி உள்ளார். மற்றோரு முக்கிய சங்க நூலான மதுரைக் காஞ்சியில் தலை வணங்காத சிறு வீரன் பாண்டியன் என்று ஒரு பாண்டிய மன்னனைப் பற்றி புகழ்ந்து எழுதப்பட்டு உள்ளது. அதில் 'சங்க காலத்தில் அவனும் முருகப் பெருமானைப் போலவேதான் எதிரிகளுடன் போர் தொடுத்து, அவர்களை சூறையாடி, அழித்து, அவர்களுடைய கோட்டைகளைக் கைபற்றி, அவர்கள் பெற்றிருந்த பெருமைகளையும் அழித்த பின்னரே மனம் அடங்குவான்' எனக் குறிப்பிடப் பட்டு உள்ளது.

மலைப்பாட்டுக்காட்டம் என்ற மற்றோரு சங்க நூல் மலைப் பகுதியில் இருந்த ஒரு தலைவனின் பெருமை பற்றிக் கூறுகையில் அவன் முருகக் கடவுளுக்கு இணையான பராக்கிரமசாலியாகவும், வீரனாகவும் விளங்கினான் என்று கூறியது. கபிலரின் குறிஞ்சிப்பட்டு பாடல்களில் முருகனின் வேல் குறித்து கூறுகையில், அது மின்னலைப் போல் வெளிச் சென்று எதிரிகளை அழித்தது என எழுதினார். சங்க கால இலக்கியங்களில் வீரர்களும், மன்னர்களும் மட்டும் அல்ல, குடும்பத் தலைவர்களையும் கூட முருகனுடன் ஒப்பிட்டுப் பார்த்தனர்.

## அழிக்கப்பட்ட தீய சக்திகள்

சங்க கால இலக்கியங்களில் சூரனையும், சூரபத்மனையும் அழித்த முருகனின் பராக்கிரமங்களைக் குறித்து எழுதப்பட்டு உள்ளன. அது பற்றிய செய்திகள் அவற்றில் நிறையவே உண்டு. சூரனும், சூரபத்மனும் தீய சக்திகள் என்று கருதப்பட்டனர். அவர்களை அழித்தவர் முருகன் என்றும் அதனால் மனித குலம் மேன்னை அடைய அவர் அவசியம் தேவை என்றும், விவசாயி ஒருவன் எப்படி நிலங்களில் இருந்து விஷ விதைச் செடிகளை களையெடுத்து எறிந்து விடுகின்றானோ அது போல ஒரு மாவீரனும் சமூகத்தில் அப்படிப் பட்ட செயல்களைச் செய்வதற்கு வேண்டும் எனவும் பண்டைய தமிழ் குடி மக்கள் நினைத்தனர். அதற்கு உதாரணமாக " நிலத்தில் இருந்து விஷ விதைகளைக் களைந்து எறிவது போன்றதுதான் ஒரு மன்னன் கடுமையான தண்டனையை ஒரு கொடுமையான கொலைகாரனுக்கு கொடுப்பதும் " என்று திருவள்ளுவர் எழதி உள்ளதைக் காண வேண்டும்.

## முருகன் , முருகு

முருகனைப் குறித்து பல சொற்களும், பழமொழிகளும் தமிழில் இருந்தாலும் பழங்குடி தமிழ் மக்கள் அவரை முக்கியமான இரண்டு தமிழ்ப் பெயர்களில் முருகன் என்றும் முருகு என்றும் வணங்கினர். முருகு என்பகற்கு மிருதுவானது, அழகானது, இளமையானது, மற்றும் இளைஞன், முருகக் கடவுள், அபரணங்கள் நிறைந்த சுருண்ட காதுகள், மணம், கடவுளின் பூசாரி என்ற பல அர்த்தங்கள் உண்டாம். புகழ் பெற்ற சின்தன் தீவகாரம் ( **Centan Tivakaram**) என்ற என்ற தமிழ் நூல் கடவுளுக்கு ஏழு விதப் பெயர்களைத் தந்து உள்ளது. சங்க இலக்கிய நூல்களில் முருகு மற்றும் முருகன் என்ற பெயர்கள் சமீப காலத்தில் காணப்படுபவை. பழங்குடித் தமிழ் இனத்தினர் இயற்கையுடன் இணைந்திருந்படி எளிமையான வாழ்க்கை வாழ்ந்து வந்தனர் என்றாலும் முருகனை எந்த அளவில் அவர்கள் போற்றி வந்துள்ளனர் என்பது அவரை முருகு மற்றும் முருகுன் என்ற அடைமொழிப் பெயர்களால அழைத்ததின் மூலம் விளக்கும்.



வள்ளியுடன் முருகன்

முருகன் இயற்கையிலேயே மிக அழகானவர், இளமைத் ததும்பியவர், உண்மையிலேயே துடிப்பு மிக்கவர் என்பதாக எல்லாம் நினைக்கப்பட்டவர். முருகனுக்கு இயற்கையிலேயே மணம் உண்டு என்றும், ஜொலிக்கும் உடலமைப்பும், கவர்ச்சி மிக்க தோற்றமும் கொண்டவர் என்றும் அவரைப் பற்றிக் கருதினர். புகழ் பெற்ற தமிழ் கவிஞர் வீ. கல்யாண சுந்தரனார் " முருகு என்பது பல அர்த்தங்களை உள்ளடக்கிய சொல. அது அவரக்கு இயற்கையாக அமைந்து இருந்த உடல் அழகையும், இளமையையும், தோற்றத்தையும் குறித்து விவரிக்கின்றது " என்றார். திருமுறுகாற்றுப்படையில் ஜொலித்தபடி இருக்கும் சூரியனுடன் முருகக் கடவுளை ஒப்பிட்டு, ' கடலில் இருந்து வெளிச் சிதறியபடிக் காட்சி தரும் சூரிய ஒளி போல அவர் உடலும் ஜொலித்தது ' என்று வர்ணிக்கன்றது. முருகன் இயற்கையிலேயே மிக அழகானவர், இளமைத் ததும்பியவர்,

உண்மையிலேயே துடிப்பு மிக்கவர் என்பதாக பழங்குடி தமிழ் மக்கள் கருதியது உண்மையே என்பதை உறுதி செய்வது போல இது அமைந்து உள்ளது.

## பழங்குடி தமிழ் இனத்தனர் பார்வையில் வேலன்

வேலன் வெறியாடல்கள் என்ற நடன நிகழ்ச்சி முருக பக்தர்களான பழங்குடி மக்களின் சமூக கலாசாரங்களுடனும் பெரிதும் சம்மந்தப்பட்டு இருந்தது. அகத்திலும் புறத்திலும் வேலனுக்கு பண்டிதர்கள் செய்யும் சடங்கே வெறியாடல்கள். பேராசிரியர் பீ. டி. ஸ்ரீனிவாச ஐயங்கார் எழுதி உள்ளார் " காதலும், போரும்தான் அகம் என்றும் புறம் என்றும் கூறப்படுகின்றது. அதாவது எந்த ஒருவனாலும் தன்னுடைய அந்தரங்க வாழ்கையை வேறு ஒருவனுடன் பங்கு போட்டுக் கொள்ள முடியாது. அதே நேரத்தில் தன்னுடைய வாழ்க்கையின் தான் வெளிக் காட்டும் பராக்கிரம, வீரமிக்க செயலகளே மற்றவர்கள் பாராட்ட வேண்டும் என்று நினைக்கின்றனர். அதுவே அகமும்( உள்ளும் ) புறமும் ( வெளியிலும் ) என்பது. பழங்குடி தமிழ் மக்களின் உள்ளுக்குள்ளும் வெளியிலுமான - அகத்திலும் புறத்திலும் - வாழ்கையில் முருகப் பெருமானின் செல்வாக்கு பெரும் அளவில் இருந்தது. முருகனே வயதுக்கு வந்தப் பெண்களின் உள்ளத்திலும், உடம்பிலும் ஏற்படும் பெரும் அளவிலான காதல் தாகங்களுக்கும், மன மாற்றங்களுக்குக் காரணம் என அவர்கள் நம்பினர். வேலன் என்று அழைக்கப்பட்ட முருகக் கடவுள் பண்டிதர்களிடம் சென்று தங்கள் பிரச்சனைகளுக்கு வழி கூறும்படிக் கோரினர். அந்தப் பண்டிதர்கள் அநேகமாக பெரும் அறிவாற்றல் கொண்டவர்கள், தெளிந்த, முதிச்சி மிக்க எண்ணம் படைத்தவர்கள். பழங்குடி தமிழர்கள் வேலன் தங்களுடைய மனப் பிரச்சனைகளே நன்கு ஆராய்ந்து தமக்கு ஒரு வழி காட்டுவார் என நம்பினர். வேலனின் சொல்லுக்குக் கட்டுப்பட்டு நடந்தவர்கள் அவர் கூறியதை முருகனின் வாக்கு என நம்பினர்.

தமிழ் நூல்களில் ஆதாரபூர்வமாக உள்ளது என்று ஏற்கப்பட்டுள்ள தொல்காப்பியத்தில் வேலன் வெறியாடல் ( ***velan veriyatal*** ) என்பதுப் பற்றிய குறிப்பு உள்ளது. குறிஞ்சி வேலன் வெறியாட்டதில் முருகன் அனேகமாக குறிஞ்சிப் பூக்களால் ஆன மாலைகளேயே அணிந்து இருப்பார். ஆடுகாலம் என்ற மலர்களால் அலங்கரிக்கப்பட்ட மேடையிலஅந்த சம்பிரதாய சடங்கு நடன நிகழ்சி நடை பெறுகின்றது. அதில் வித விதமான வண்ணமயமான அரிசி சாதங்கள் மற்றும் இறைச்சி போன்ற பல வித உணவப் பொருட்கள் ,முருகனுக்கு படையலாக செய்யப் படுகின்றது. அதில் வேலன் என்பவர் முருகக் கடவுளின் கையில் வைத்திருக்கும் ஆயுதமான வேலேப் போன்ற ஒரு வேலேப் பிடித்து இருப்பர். அந்த வேலன என்பவர்களே முருகனின் அவதாரப் பிறவிகள் என்றே பழங்குடி தமிழ் இனத்தினர் கருதி வணங்கினர். ஏட்டுத் தொகை மற்றும் பட்டுப்பாட்டில் அந்த சடங்கு நிகழ்சியான வெறியாடல் பற்றிக் குறிப்புக்கள் உள்ளன. அகமும் பூறமும் பகுதியில் புறப் பகுதியின் இறுதியில் யுத்த களத்தில் வீழ்ச்சி (***vettci***) அடையப் போவது யார் என்று கூறுவார்கள். இந்த நிகழ்சியில் உள்ள ஒரே மாற்றம் குறிஞ்சிப் பூக்களுக்குப் பதில் கண்டல் பூக்களே அந்தப் வேலன் பண்டிதர்கள் அணிந்து இருப்பார். போர் வீரர்கள் வேலன் கூறும் எதிர் காலப் பலன்களை அப்படியே நம்புவர். இதில் முக்கியமானதாக கவனிக்க வேண்டியது என்ன எனில் அகப் பகுதியில் இளம் பெண்களின் காதல் குறித்தும் அதனால் ஏற்பட இருக்கும் உடல், மன ரீதியான விளைவுகளேயும் கூறி அதற்காக என்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றியும் விளக்கிக் கூறுவார்கள். செவிலித் தாய்மார்ளும் தங்களுடைய சொந்த பிரச்சனைகளேக் கூறி அதற்கு பரிகாரம்

கூறுமாறு வேண்டுவார்கள். பழங்குடி தமிழர்கள் தங்களுக்கு ஏற்பபட்டு இருக்கும் மனத் துயரங்களுக்கு வேலனின் அருளினால் ஒரு பரிகாரம் கிடைக்கும் என நம்பினர்.

## ஒருங்கிணையும் காதலர்கள்

முருகனை பராக்கிரமசாலியான போர்க் கடவுள் என்று மட்டும் அல்ல, அன்படன் பழகுபவர்களை ( காதலர்கள்) ஒன்றிணைப்பவர் எனவும் நம்பினர். திருமணத்துக்கு முன் காதலித்து வந்தவர்கள் அவர்களின் உதாரண நாயகனாக முருகனை ஒரு தங்கள் மனதில் வைத்திருந்தனர். நாரிணை என்ற நூலில் திருமணத்துக்கு முன்பே முருகன் வள்ளியுடன் நெருங்கிப் பழகியதற்கான செய்திகள் இருந்தன. மருத்துவ வல்லுனர்கள் கூட " தொடங்கி நெருங்கிப் பழகுவதில் மூலமே உடல் மற்றும் மன ரீதியில் ஒருவள் முதிர்ச்சி பெற்று காதலிக்கத் துவங்குகின்றாள் " என்கின்றனர். பண்டைக் காலத்தில் இருந்து வந்த பழக்க வழக்கங்களை நோக்கும் பொழுது " ஒரு மகிழ்சிகரமான மண வாழ்க்கை அமையவும், ஒருவரை ஒருவர் நன்கு புரிந்து கொள்ளவும், திருமணத்துக்கு முன் இருவரும் நெருக்கமாகப் பழக வேண்டியது அவசியம் " என அவர்கள் கருதினர் என்பது புரியும். பழங்குடி தமிழர்கள் சமூகத்தில் இருந்த அனைத்துக் காதல் கதைகளுக்கும் திருமணத்துக்கு முன்னர் இணைந்திருந்த முருகன்-வள்ளி இருவரின் காதல் வாழ்க்கையே மூலக் கருத்தாக விளங்கியது. தொல்காப்பியத்திலும் முருகன்- வள்ளியின் திருமணத்திற்கு முன்பான தொடர்பு பற்றி கூறப்பட்டு உள்ளது. தொல்காப்பியத்தில் அதை வள்ளிக் கூட்டு என்ற பெயரில் கூறப்பட்டு உள்ளது. வள்ளி என்றால் மிருதுவான வள்ளி செடியையும் மற்றும் முருகனின் மனைவியுமான வள்ளியையும் குறிக்கும். தொல்காப்பியர் வாடாவள்ளி என்றார். வாடா என்றால் வாடிவிடும் வள்ளிச் செடியை அல்லாமல் பொலிவோடு இருக்கும் வள்ளியை குறிக்கும்.

பழங்குடித் தமிழர்கள் வள்ளிக் கூத்து நடன நிகழ்சியை நடத்தி வந்தனர். முக்கிய கதானாயகி பாத்திரமாக இருப்பது வள்ளியே எனும் விதத்தில் அவை அமைந்து இருந்தது. ஆகவே பண்டை காலத்தில் வள்ளி-முருகனின் காதலை உத்தமமான காதல் என்று ஒரு மேற்காட்டி, அதை ஒரு உதாரணமாக வைத்து இருந்தனர். சங்க நூல்களில் வெற்றிவேல், செவ்வேல், வீரவேல். என முருகனை கூறி உள்ளனர். பழங்குடித் தமிழர்களுக்கு முருகனிடம் அளவு கடந்த மோகம் இருந்தது. ஏன் எனில் திருமணத்திற்கு முன் நெருக்கமாக இணைந்து இருந்து அதன் பின் இணைந்த அவதார புருடர்களாகவே அவரை கண்டனர். ஒரு காதல் தோற்றால் அது வள்ளிச் செடி போல, வெற்றி பெற்றால் காதலினால் இணைந்த அந்த வள்ளிக் கடவுளைப் போல என கருதியதில் தவறென்ன?.